DOWNLOADED FROM : https://cbseportal.com/

# மாதிரிவினாத்தாள் - 2022 - 23

## SAMPLE QUESTION PAPER -2022 -23

வகுப்பு: பன்னிரண்டு (XII-STD) | மொத்தமதிப்பெண்கள்:80 Maximum marks: 80

தமிழ் TAMIL 106 | காலஅளவு : 3 மணி Time Allowed : 3 Hours

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பட்ட 13 பக்கங்கள் உள்ளதைச் சரி பார்க்கவும்
- இந்த வினாத்தாளில் 14 வினாப் பகுதிகள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்
- எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்
- Please check that this question paper contains 13 printed pages
- Please check that this question paper contains 14 part of the questions
- Please write down the serial number of the question before attempting it.

---

## பகுதி அ

### SECTION - A (40 MARKS)

1. A. <u>பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடைதருக</u>. 5x1=5

உலக அரங்கில் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழும் இந்தியக் கலைப்படைப்புகளுக்கு ஈராயிரம் ஆண்டு மரபுப் பெருமை உண்டு. பல்வேறு அரச மரபினர் தம் முயற்சியாலும், இந்திய மண்ணில் உதித்த சமயங்களின் எழுச்சியாலும் அக்கலை மரபு புதிய புதிய பரிமாணங்களைப் பெற்றுத் தழைக்கலாயிற்று. அத்தகு இந்தியக் கலை மரபுக்கு மகுடமென விளங்குவன தமிழகக் கலைப்படைப்புகளே என்றால் மிகையன்று. இதற்கு அடிப்படைக் காரணம் யாது என்பதை நோக்குவோமாயின், நகை, அழுகை, இளிவரல், மருட்கை , அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை என்னும் ஒன்பது சுவைகளையும் மெய்ப்பாடாக வெளிப்படுத்தும் உயிர்ப்புப் படைப்புகளாக அவை விளங்குகின்றன. கல்லும் கவிபாடும் என்பர். இது புனைந்துரையன்று. கல் நம்மோடு பேசும்! சிரிக்கும்! அழும்! கோபத்துடன் சீறும்! வலி தாங்காமல் அலறும்! ஆம். கலைப்படைப்புகளோடு நம் உள்ளத்தைப் பிணைக்கக் கூடிய இரசனை உணர்வைப் புரிதலோடு வளர்த்துக்கொண்டோமானால் இவை அனைத்தும் நிகழ்வதைக் காணலாம். ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளாக நெருப்பின் சூடு தாங்கமுடியாமல் துடித்து அலறும் அரக்கர் இருவர்தம்

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

கற்சிற்பங்களைத் திருமெய்யம் என்னும் ஊரில் காணலாம். மெய்யம் சென்றால் நாமும் அச்சூட்டின் கொதிப்பை உணரலாம்.

வினாக்கள்:

I. இந்தியக் கலைமரபுக்கு மகுடமென விளங்குவன_______ ஆகும்.

A) தென்னகக் கலைப்படைப்புகள் B) தமிழகக் கலைப்படைப்புகள்

C) சிற்பக்கலைகள் D) கட்டடக்கலைகள்

II. இந்தியக்கலை மரபு புதிய புதிய பரிமாணங்களைப் பெற்றுத் தழைக்கக் காரணம் யாது?

A) அரசர் முயற்சி B) சமய எழுச்சி C) கலைஞர்கள் எழுச்சி

D) அரசமரபினர் முயற்சி மற்றும் சமய எழுச்சி

III. மெய்ப்பாடாக உணர்த்தப்படும் சுவைகள் எத்தனை?

A) எட்டு B) ஒன்பது C) பத்து D) ஆறு

IV. திருமெய்யம் அரக்கர் சிலை அமைக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

A) 1000ஆண்டுகள் B) 1100 ஆண்டுகள் C) 1200 ஆண்டுகள்

D) 1300 ஆண்டுகள்

V. இந்தியக் கலைமரபின் வயது என்ன?`

A) 3000ஆண்டுகள் B) 1100 ஆண்டுகள் C) 2000 ஆண்டுகள்

D) 1300 ஆண்டுகள்

**( அல்லது)**

**B. பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடைதருக.**

வாழ்வில் கடிதத்திற்குச் சீரிய இடம் உண்டு. கடிதம் எவரையும் எதிர்நோக்கி இருக்கச் செய்யும்; ஆர்வத்தை எழுப்பிப் படிக்க ஏவும்; படித்த பின்னரும் பேணிக் காக்கவும் செய்யும். சில கடிதங்கள் பொன்னினும் சிறந்தனவாகப் போற்றப் பெறும். இத்தகைய ஆர்வ உத்தியை மு.வ. அரிதில் தேர்ந்து அருமையாகப் போற்றி ஐந்து கடித இலக்கிய நூல்களை அமைத்தார். அவற்றுள் நான்கு வாழ்வாங்கு வாழும் வாழ்வு நெறியை வனப்புறத் தீட்டிக்காட்டுவது. ஒன்று ஈழநாட்டுச் செலவு பற்றியது. நேரு பெருமகனார் தம் மகளார்க்கு எழுதிய கடிதம் உலக வரலாறு ஆகியது; காரல் மார்க்ஸ், எங்கல்ஸ் என்பார் கடிதங்கள் செல்வமாக மதிக்கப்படுகின்றன. காந்தியடிகளார்

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

கடிதங்கள் வழிகாட்டும் ஒளிவிளக்குகளாகக் கொள்ளப்படுகின்றன. மறைமலையடிகளார் இயற்றிய 'கோகிலாம்பாள் கடிதங்கள்'என்னும் நூல் புனைவு இலக்கியமாக மதிக்கப்படுகின்றது. கடித அமைப்பிலேயே கதை கூறும் நடைமுறையும் உண்டு. அவலந் தகர்த்து நல்வழிப்படுத்தும் பான்மைக்கு மு.வ. கடித இலக்கியங்கள் சான்று பகர்வனவாம். கட்டுரை நூல்களினும் ஏன் கதை நூல்களிலும் கூட கடித நூல்களே மிகுதியாக விற்பனையாயின என்னும் உண்மைச்செய்தி கடித இலக்கியத்தைச் சமூகம் எத்துணை வரவேற்கின்றது என்பதைத் தெளிவாக்க வல்லதாம். 'அன்னைக்கு', 'நண்பர்க்கு', 'தம்பிக்கு', தங்கைக்கு' என்பவை கடித நூல்களின் பெயர்கள்.

<u>வினாக்கள்:</u>

I. வாழ்வாங்கு வாழும் வாழ்வுநெறி குறித்து மு.வ எழுதிய நூல்கள் எத்தனை?

A) ஐந்து B) ஒன்று C) நான்கு D) மூன்று

II. யார்தம் கடிதநூல் உலகவரலாறு ஆனது?

A) மார்க்ஸ் B)நேரு பெருமகன் C) ஏங்கல்ஸ் D) காந்தியடிகள்

III. யாருடைய கடிதங்கள் வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கின்றன?

A) மார்க்ஸ் B)நேரு பெருமகன் C) ஏங்கல்ஸ் D) காந்தியடிகள்

IV. புனைவு இலக்கியமாக மதிக்கப்படும் நூல் எது ?

A) 'கோகிலாம்பாள் கடிதங்கள் B) மறைமலையடிகள் கடிதங்கள்

C) தம்பிக்கு D) தங்கைக்கு

V. மு.வ படைத்த கடித இலக்கிய நூல்கள் எத்தனை?

A) ஐந்து B) ஒன்று C) நான்கு D) மூன்று

**2. A. பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடை தருக.** **5x1=5**

வீட்டுக்கொரு நூலகம் வேண்டும்' என்றார் அறிஞர் அண்ணா. அத்தகைய நூலகத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியது நம் கடமையாகும்.லிப்ரா என்றால் புத்தகம் என்று பொருள் ."லிபர்" என்கிற இலத்தீன் மொழிச் சொல்லுக்குப் புத்தகத் தொகுதி என்று பொருள். அதிலிருந்தே 'லைப்ரரி' என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது.
உலகின் முதல் நூல்நிலையம் கி.மு.2500 ஆம் ஆண்டு பாபிலோனிய அரசால் பாபிலோன் நகரத்தில் நிறுவப்பட்டது. அப்போது களிமண்ணைக் கொண்டு உருவாக்கிய 'களிமண் பலகைப் புத்தகங்களே வழக்கத்தில் இருந்தன,' இப்படிப்பட்ட ஆயிரத்துக்கும் மேலான புத்தகங்களைக் கொண்டு இந்நூலகம்

Download FREE CBSE E-BOOKS
FREE!
CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

நிறுவப்பெற்றது. இந்தக் களிமண் பலகை புத்தகங்களை அப்போதே நிலை அடுக்குகளில் (அலமாரி) பொருள் வாரியாகச் சேர்த்து வைத்திருந்தார்கள். இந்நூலகம் அமில் அனு என்பவரால் பராமரிக்கப்பட்டு வந்தது. இவரே உலகின் முதல் நூலகராவார். இந்நூலகத்தில் இருந்த 25 களிமண் பலகைப் புத்தகங்களை இன்றும் பிரிட்டன் அருங்காட்சியகத்தில் வைத்துள்ளதைக் காணலாம். அண்ணல் அம்பேத்கர் , அறிஞர் அண்ணா , பண்டிதர் நேரு , அறிஞர் காரல் மார்க்ஸ் போன்றவர்கள் வாசிப்பை நேசித்த தலைவர்கள் ஆவர்

வினாக்கள்:

I. உலகின் முதல் நூல்நிலையம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?

A) கி.பி.2500 B) கி.மு.2500 C) கி.மு.1500 D) கி.பி.1500

II. வீட்டுக்கொரு நூலகம் வேண்டும்' என்ற அறிஞர் யார்?

A) அம்பேத்கர் B)அண்ணா C) நேரு D)காரல் மார்க்ஸ்

III. நூலகத்திற்கான ஆங்கிலச்சொல் எம்மொழியிலிருந்து பிறந்தது?

A) கிரேக்கம் B) ஆங்கிலம் C) இலத்தீன் D) தமிழ்

IV. உலகின் முதல் நூல் நிலையத்தின் நூல்கள் எதனால் ஆனவை?

A) காகிதத்தால் B) கல்லால் C} ஓலையால் D ) களிமண்ணால்

V. அமில் அனு என்பவரின் சிறப்பு யாது?

A) முதல் நூலகர், B) முதல் எழுத்தாளர்

C) நூலைக் கண்டுபிடித்தவர் D) முதல் பதிப்பாளர்

**( அல்லது)**

**B.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.**

ஒரு மொழியின் செழுமை என்பது அதன் சொற்களில் இருக்கிறது. தமிழ், சொற்களுக்குப் பஞ்சம் இல்லாத ஒரு மொழி. மனிதன் உருவாக்கிய நீர்நிலை கட்டுமானங்களுக்கு அவன் பல பெயர்களைவைத்திருக்கிறான்.இலஞ்சி,கயம்,கேணி,கோட்டகம்,ஏரி, மலங்கன், மடு,ஓடை, வாவி, சலந்தரம்,வட்டம்,தடாகம், நளினி, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம்,கண்மாய் என்பன அவற்றுள் சில.

இயற்கையான நீர் ஊற்றுகள் உள்ள இடங்களில் அமைந்த நீர்நிலைகளுக்குப் "பொய்கை,ஊற்று" என்று பெயர். தானாகவே நீர் கசிந்து சிறிய அளவில் தோன்றும் நீர் நிலைகளுக்குச் 'சுனை','கயம்'என்று பெயர். ஊற்றுகள் எதுவும் இல்லாமல் மழைநீர் மட்டும் தேங்கி இருக்கும் சிறிய நீர்க்கேக்கக்கிற்குக் 'குட்டை' என்று பெயர்.மக்கள் குளிப்பகற்காக

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

உருவாக்கப்பட்ட நீர்நிலைகளுக்குக் 'குளம்' என்று பெயர். குடிப்பதற்கும், சமைப்பதற்கும் போன்ற உணவுத் தேவைகளுக்குப் பயன்படும் நீர்நிலைகளை 'ஊருணி' என்று அழைத்தார்கள்.

நிலத்தால் மாறுபடும் நீரின் சுவையை இனிமையாக்க ஊருணிக் கரைகளில் நெல்லிமரங்களை நட்டார்கள்.அது நீரின் சுவையைக் கூட்டும்,கிருமிகளைக் கொல்லும் மருந்தாகவும் பயன்பட்டது.ஏர் உழும் தொழில்களுக்கு நீர் தரும் நீர்நிலைகளுக்கு 'ஏரி' என்று பெயர் வைத்தார்கள். வெறும் மழை நீரை மட்டுமே ஏந்தி தன்னுள் சேர்த்து வைத்துக் கொள்ளும் நீர்நிலைகளுக்கு 'ஏந்தல்' என்று பெயர். இதில் நதியின் நீர் சேர்வதில்லை. நீரைக் கால்வாய் மூலம் கொண்டு வந்து சேர்த்து அதன் மூலம் உருவாக்கப்பட்ட நீர்நிலைகளுக்குக் 'கண்மாய்' என்று பெயர்.

<u>வினாக்கள்:</u>

I. குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படும் நீர்நிலைகளை எவ்வாறு அழைத்தனர்?
   A.குட்டை B.ஊருணி C.குளம் D.ஊற்று

II. ஒரு மொழியின் வளம் எதில் இருக்கிறது?
   A.சொற்களில் B.எழுத்துகளில் C.பேசுவதில் D.எழுதுவதில்

III. நீரைக் கால்வாய் மூலம் கொண்டு சேர்ப்பதன் மூலம் உருவாகும் நீர்நிலையின் பெயரென்ன?
   A.சுனை B.குட்டை C..கண்மாய் D.ஏரி

IV. ஏரியை எதற்குப் பயன்படுத்தினார்கள்?
   A.குளிப்பதற்கு B.துவைப்பதற்கு C.ஏர் உழும் தொழிலுக்கு D.சமைப்பதற்கு

V. நெல்லிமரங்களை எதற்காக நட்டார்கள்?
   A.நீரின் வேகத்தைக் கட்டுபடுத்த B.நீரின் பாதையை மாற்ற C.நீரின் சுவையைக் கூட்ட D. நீரின் வேகத்தைக் கூட்ட

**3. <u>பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக</u> [ ஐந்து மட்டும் ]** **5x1=5**

**I. மிகக் குரைவாகப் பேசுகிறவர் உளகின் மிகச் சிறந்த மனிதர்.**

A. மிகக் குரைவாகப் பேசுகிறவர் உலகின் மிகச் சிறந்த மனிதர்.
B. மிகக் குறைவாகப் பேசுகிறவர் உளகின் மிகச் சிறந்த மனிதர்.
C. மிகக் குறைவாகப் பேசுகிறவர் உலகின் மிகச் சிறந்த மனிதர்.
D. மிகக் குறைவாகப் பேசுகிரவர் உலகின் மிகச் சிறந்த மனிதர்.

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

II. **மணத்தில் கருனை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்**

A. மனத்தில் கருணை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்
B. மனத்தில் கருணை நிறைந்தவர் அறம் செய்கின்றனர்
C. மனத்தில் கருணை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்
D. மனத்தில் கருனை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்

III. **சிக்கண வாழ்வே சீறான வாழ்வு என்றனர் முன்னோர்.**

A. சிக்கன வாழ்வே சீறான வாழ்வு என்றனர் முன்னோர்
B. சிக்கண வாழ்வே சீரானவாழ்வு என்றனர் முன்னோர்
C. சிக்கன வாழ்வே சீரானவாழ்வு என்றனர் முன்னோர்
D. சிக்கன வாள்வே சீறானவாழ்வு என்றனர் முன்னோர்

IV. **ஆள்ந்த வெறுப்பு ஆழமான வெட்டுக் காயத்தை உன்டாக்குகிறது.**

A. ஆழ்ந்த வெறுப்பு ஆழமான வெட்டுக் காயத்தை உண்டாக்குகிறது.
B. ஆள்ந்த வெறுப்பு ஆழமான வெட்டுக் காயத்தை உண்டாக்குகிறது.
C. ஆழ்ந்த வெறுப்பு ஆழமான வெட்டுக் காயத்தை உன்டாக்குகிறது.
D. ஆள்ந்த வெறுப்பு ஆளமான வெட்டுக் காயத்தை உன்டாக்குகிறது.

V. **கடள்கரையில் நின்று அளையை நெடுநேரம் பார்த்தேன்.**

A. கடல்கரையில் நின்று அளையை நெடுநேரம் பார்த்தேன்
B. கடள்கரையில் நின்று அலையை நெடுநேரம் பார்த்தேன்
C. கடள்கரையில் நின்று அளையை நெடுநேறம் பார்த்தேன்
D. கடற்கரையில் நின்று அலையை நெடுநேரம் பார்த்தேன்

VI. **பனப்பை வைத்திருக்கும் தந்தையர் பில்லைகள் பரிவைக் காண்பர்.**

A. பணப்பை வைத்திருக்கும் தந்தையர் பில்லைகள் பரிவைக் காண்பர்.
B. பணப்பை வைத்திருக்கும் தந்தையர் பிள்ளைகள் பரிவைக் காண்பர்.
C. பனப்பை வைத்திருக்கும் தந்தையர் பிள்ளைகள் பரிவைக் காண்பர்.
D. பணப்பை வைத்திருக்கும் தந்தையர் பிள்ளைகள் பறிவைக் காண்பர்.



DOWNLOADED FROM : https://cbseportal.com/

**4. வல்லினமெய்யிட்டுத் திருத்தியதொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக [ ஐந்து மட்டும் ]** 5x1=5

**I. பலவற்றை கேளுங்கள்:ஒரு சிலவற்றை பேசுங்கள்.**

A. பலவற்றைக் கேளுங்கள்:ஒரு சிலவற்றை பேசுங்கள்
B. பலவற்றை கேளுங்கள்:ஒரு சிலவற்றைப் பேசுங்கள்
C. பலவற்றைக் கேளுங்கள்:ஒரு சிலவற்றைப் பேசுங்கள்
D. பலவற்றை கேளுங்கள்:ஒருச் சிலவற்றை பேசுங்கள்.

**II. கரடியை கண்ணாடியாலும் மனிதனை புகழ்ச்சியாலும் ஏமாற்றலாம்.**

A. கரடியைக் கண்ணாடியாலும் மனிதனைப் புகழ்ச்சியாலும் ஏமாற்றலாம்.
B. கரடியை கண்ணாடியாலும் மனிதனைப் புகழ்ச்சியாலும் ஏமாற்றலாம்.
C. கரடியைக் கண்ணாடியாலும் மனிதனை புகழ்ச்சியாலும் ஏமாற்றலாம்.
D. கரடியை கண்ணாடியாலும் மனிதனை புகழ்ச்சியாலும் ஏமாற்றலாம்.

**III. சிற்றுயிர்கள் நமக்கு கற்று தரும் பாடம் முயற்சி ஆகும்**

A. சிற்றுயிர்கள் நமக்குக் கற்றுதரும் பாடம் முயற்சி ஆகும்
B. சிற்றுயிர்கள் நமக்குக் கற்றுத்தரும் பாடம் முயற்சி ஆகும்
C. சிற்றுயிர்கள் நமக்கு கற்றுத்தரும் பாடம் முயற்சி ஆகும்
D. சிற்றுயிர்கள்ந் நமக்குக் கற்றுதரும் பாடம் முயற்சி ஆகும்

**IV. உனக்கு கீழே உள்ளவர் கோடி என்பதை சிந்தித்து பார்.**

A. உனக்குக் கீழே உள்ளவர் கோடி என்பதைச் சிந்தித்து பார்.
B. உனக்கு கீழே உள்ளவர் கோடி என்பதைச் சிந்தித்து பார்.
C. உனக்குக் கீழே உள்ளவர் கோடி என்பதைச் சிந்தித்துப் பார்.
D. உனக்கு கீழே உள்ளவர் கோடி என்பதைச் சிந்தித்துப் பார்.



DOWNLOADED FROM : https://cbseportal.com/

V. **கருணையை வற்புறுத்தி பெற முடியாது அது வானிலிருந்து விழும் அமுத தாரை.**

A. கருணையை வற்புறுத்திப் பெற முடியாது அது வானிலிருந்து விழும் அமுத தாரை.
B. கருணையை வற்புறுத்தி பெற முடியாது அது வானிலிருந்து விழும் அமுதத் தாரை.
C. கருணையை வற்புறுத்திப் பெற முடியாது அது வானிலிருந்து விழும் அமுதத் தாரை.
D. கருணையை வற்புறுத்திப் பெற முடியாது அதுவ் வானிலிருந்து விழும் அமுத தாரை.

VI. **சமுதாய தொண்டர்கள் மக்களுக்கு தொண்டு செய்தனர்**

A. சமுதாயத் தொண்டர்கள் மக்களுக்குத் தொண்டுச் செய்தனர்.
B. சமுதாயத் தொண்டர்கள் மக்களுக்குத் தொண்டு செய்தனர்
C. சமுதாயத் தொண்டர்கள் மக்களுக்கு தொண்டுச் செய்தனர்
D. சமுதாய தொண்டர்கள் மக்களுக்குத் தொண்டுச் செய்தனர்

**5. எடுத்துக்காட்டு எழுதுக [ஐந்தனுக்கு மட்டும்]** **5x1=5**

I. **உணர்ச்சி வாக்கியம்**

A. ஏறுபோல் நட
B. அஞ்சுவது அன்று ஆண்மை
C. ஐயோ ! இன்றும் வருமோ பசி.
D. அச்சமும் உண்டோ எனக்கு?

II. **தொடர் வாக்கியம்**

A. இளங்கோ சிறந்த கவிஞர்.
B. இளங்கோ சிறந்த கவிஞர்; தமிழகத்தைச் சேர்ந்தவர்; ஒருமைப்பாட்டை பேசியவர்.
C. இளங்கோசேரநாட்டில் பிறந்த போதும் ஒருமைப்பாடு பற்றி பேசினார்.
D. இளங்கோ ஒருமைப்பாடு பற்றி பேசியவர் .

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

III. **தனி வாக்கியம்**

A. நாமக்கல் இராமலிங்கனார் விடுதலை வீரர்,
B. நாமக்கல்லார் சிறந்த கவிஞர்; தமிழகத்தைச் சேர்ந்தவர்: விடுதலைப் போரில் ஈடுபட்டவர்
C. நாமக்கல்லார் ஓவியராக இருந்த போதும் கவிதைகள் எழுதினார்
D. நாமக்கல் கவிஞர் தன்வரலாறு எழுதினார்.:ஓவியம் தீட்டினார்

IV. **தன் வினைத்தொடர்**

A. குமணன் நன்றாகக் கதைகள் எழுதுவான்
B. பாண்டியர்களால் தமிழ் வளர்க்கப்பட்டது.
C. மக்கள் தலைவர்களால் பாராட்டப்பட்டனர்.
D. கோதை எப்பொழுதும் படிக்காமல் இருந்ததே இல்லை

V. **செயப்பாட்டுவினைத்தொடர்**

A. திருக்குறள் சொல்லாதது எதுவும் இல்லை
B. திருக்குறளில் வாழ்க்கை உண்மைகள் பல சொல்லப்பட்டுள்ளன. .
C. திருக்குறளில் எல்லாப் பொருளும் உள்ளன.
D. திருக்குறளில் இல்லாதது எதுவும் இல்லை

VI. **செய்வினைத்தொடர்**

A. கரிகாலன் கல்லணை கட்டினான்
B. கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது.
C. புலவர்களால் தமிழ் வளர்க்கப்பட்டது.
D. உலகைப் பொதுவில் வை

6. **<u>பின்வரும் செய்யுளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>:** (5x1=5)

**ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்**
**ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்**
**புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்**
**நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ**
**மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்**
**கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க**

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழ கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசி
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்."

<u>வினாக்கள்:</u>

I. இச்செய்யுள் ஆசிரியர் யார்?
A.அய்யப்ப மாதவன் B) கபிலர் C) நக்கீரர் D) பரணர்

II. இச்செய்யுள் எத்துறையைச் சார்ந்தது?
A) வாகை B) கூதிர்ப்பாசறை C) முதுமொழிக்காஞ்சி D) காஞ்சி

III. குளிரால்நடுங்கியவை எவை ?
A.) பசுக்கள் B) ஆயர் C) குரங்குகள் D) பறவைகள்

IV. புலம்பு- இச்சொல்லின் பொருள் யாது ?
A.) குறை சொல்லுதல் B)வெறும் பேச்சு C) வருத்தம் D) தனிமை

V. தரையில் விழுந்தவை எவை ?
A)பசுக்கள் B) ஆயர் C) குரங்குகள் D) பறவைகள்

7. **<u>பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடையளி</u>:** **5×1=5**

மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான். இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார் ஆர்டிக் பகுதி கடந்த முப்பது ஆண்டுகளில் நான்கு லட்சம் சதுர மைல்கள் உருகி உள்ளது இதற்குப் புவி வெப்பமாதலே காரணமாகும். கார்பன் டை ஆக்சைடு. மீத்தேன் ,நைட்ரஸ் ஆக்சைடு, நீர் வாயு போன்றவற்றைத்தான் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறார்கள் இதன் அளவு அதிகமாக அதிகமாக புவி வெப்பமடையத் தொடங்குகிறது இதனால் காலநிலை மாறுதல்கள் ஏற்பட்டு புவியின் இயக்கம் குறைந்து வருகிறது எனவே மாற்று ஆற்றலாக விளங்கக்கூடிய சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல் போன்ற கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாட்டை நோக்கி உலக நாடுகள் சென்றால் மட்டுமே நிலைமையை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடியும். ஐக்கிய நாடுகள் அவை 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றியபணித்திட்டப் பேரவையை உருவாக்கியது. இந்த அமைப்பில் தொடக்கத்தில் 50 நாடுகள்

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

உறுப்பினர்களாக இருந்தன. பின்னர் இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது.

<u>வினாக்கள்:</u>

I. ஆர்டிக் பகுதி கடந்த 30 ஆண்டுகளில் உருகி உள்ள பரப்பளவு எவ்வளவு?
  A. 4 லட்சம் சதுர கிலோ மீட்டர்  B. 40 லட்சம் சதுர மைல்கள்
  C.4 லட்சம் சதுர மைல்கள்  D. 4 லட்சம் மைல்கள்

II. மனிதன் இயற்கை வளங்களைக் கடுமையாக சேதப்படுத்த என்ன காரணம்?
  A) அறியாமை  B) பேராசை  C) பணம்  D) இன்பநுகர்ச்சி

III. இவற்றில் எது பசுமைக்குடில் வாயு இல்லை?
  A) மீத்தேன் B) நைட்ரஸ் ஆக்சைடு, C) ஆக்ஸிஜன் D) நீர் வாயு

IV. ரியோ டி ஜெனிரோ காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவை எத்தனை ஆண்டுகளுக்கு முன் உருவாகியது?
  A) 27  B)28  C) 29  D) 30

V. புவி வெப்பமாதல் குறைய நாம் பயன்படுத்த வேண்டிய ஆற்றல் எது?
  A) சூரிய ஆற்றல் B) கார்பன் அற்ற ஆற்றல் C) காற்று ஆற்றல்
  D) ஹைட்ரஜன் ஆற்றல்

<u>8. வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக</u> .5x1=5

I.

A. கோவலன் கள்வன் அல்ல
B. கோவலன் கள்வன் அல்லன்
C. கோவலன் கள்வன் அன்று
D. கோவலன் கள்வன் அல்லர்

II.

A. முறுக்கும் சோறும் உண்டான்
B. முறுக்கும் சோறும் தின்றான்
C. முறுக்கு தின்றான் ;சோறு உண்டான்
D. முறுக்கு உண்டான் ; சோறு தின்றான்

III.

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE

DOWNLOADED FROM : https://cbseportal.com/

A. சிங்கக் குட்டி காட்டில் அலைந்து திரிந்தது.
B. சிங்கக் குருளை காட்டில் அலைந்து திரிந்தது.
C. சிங்கக் கன்று காட்டில் அலைந்து திரிந்தது.
D. சிங்கப் பிள்ளை காட்டில் அலைந்து திரிந்தது.

IV.

A. ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது
B. ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளன
C. ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது
D. ஒவ்வொரு வீடுகள் தோறும் நூலகம் உள்ளது

V.

A. திருநிறைச்செல்வி சுடுதண்ணீர் குடித்தாள்
B. திருநிறைசெல்வி தண்ணீர் குடித்தாள்
C. திருநிறைச்செல்வி தண்ணீர் குடித்தாள்
D. திருநிறைச்செல்வி வெந்நீர் வெகுடித்தாள்

## பகுதி -ஆ

**section:B ( 40 marks )**

**9. பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடையளி** [ 2×3= 6]

I. செந்தமிழே சீறி வா என கவிஞர் சிற்பி அழைக்கும் அழகை எழுதுக.

II. குகனொடும் ஐவர் ஆகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளை எழுதுக

III. வெகுளாமை குறித்து குறள் கூறுவனவற்றை விளக்குக

IV. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

**10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** [ 3×4=12 ]

I. கவிதையில் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.



DOWNLOADED FROM : https://cbseportal.com/

II. மழை வெள்ளத்திலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையைக் குறித்து எழுதுக.

III. தாய்வழிக் குடும்பம் குறித்து விளக்குக

IV. சென்னையில் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்திருப்பனவற்றைக் குறிப்பிடுக

V. நடையியல் குறித்து விளங்க வரைக.

**11. ஏதேனும் ஒன்று குறித்து துணைப்பாடக் கட்டுரை எழுதுக** 1x7=7

I. உரிமைத்தாகம் சிறுகதை காட்டும் முத்தையனின் பண்பு நலன்கள் குறித்து எழுதுக

II. தலைக்குளம் கதையை அதன் சுவை குன்றாமல் சுருக்கி வரைக

III. பாரதியார் கடிதங்கள் வழி அறியலாகும் அவர்தம் சமுதாயப் பார்வையும் தமிழ்ப்பற்றும் குறித்து எழுதுக.

**12. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.** **1×6=6**

I. .உங்கள் பகுதியில் தடுப்பூசி முகாம் அமைத்திட வேண்டி மாநகராட்சி மேயருக்கு விண்ணப்பக் கடிதம்.

II. தேர்வுக்கு ஆயத்தப் படுத்தல் பற்றி நண்பனுக்குக் கடிதம்.

[ எக்கடிதமாயினும் உம் முகவரி நி. நறுமுகை / ப.தாயுமானவன் , 78.நாவுக்கரசர் தெரு, ஆலந்தூர், சென்னை-16 எனக் கொள்க ]

**13. . பெருநகரங்களில் காற்று மாசடைவது குறித்து மாசுக் கட்டுப்பாட்டு வாரிய ஆணையரை நேர்காணல் செய்க.** **1×3=3**

**14. பின்வரும் தலைப்புகளில் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக.**

**1x6=6**

I. மழைநீர் மேலாண்மை

II. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய்

III. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

Download FREE CBSE E-BOOKS FREE! CLICK HERE